முருகப்பெருமான் துணை

**மகான் சேதுமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.06.2023**, செவ்வாய்கிழமை

1. தருமராஜனே ஆறுமுக அரங்கா
தரணி காக்கும் அம்சமாக
ஆறுமுகனார் அவதாரம் எடுத்த
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது மிதுனதிங்கள்
குறைவிலா வியதிகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் **12** ம் நாள், **27.06.2023**, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு சேதுமுனிவர் யானும்
3. யானும் தொண்டர்படை பெருக
உரைப்பேன் உலகம் நலமுற
ஞானவழிகள் காட்டும் அரங்கன்
நன்னெறி ஞானவான்களை படைத்து
4. படைத்துமே யுகம் மாற்றமதை
பழுதின்றி நடத்திட அருளும்
சோடையில்லா சன்மார்க்கமாம்
சுத்த நெறிமுறை யாவரும் ஏற்க
5. ஏற்கவே ஞான வாழ்வு
இலகுவாய் யாவர்க்கும் எட்டும்
ஏற்புகொண்டு ஞானிகள் பேரில்
இடைவிடா பூசைகள் செய்ய
6. செய்யவே ஏவல் முன்வினை
செயல்வழி குற்றங்களுமான
அய்யமிலா பிழைகள் அனைத்தும்
அகன்றுமேவி மாற்றம் காணும்

7. காணுமே ஞான வான்கள் எனும்
கலியினில் தேற்றம் அடைந்து
ஞானலோகம் அமையும்படி
ஞானதேசிகன் தொண்டர் படைகள்
8. படைகள் பெருகி நின்று
பாதுகாப்புத் தர வல்லதொரு
படைகள் நிறைந்த தலைமையாக
பண்பான ஆளுமையாக உலகம்
9. உலகம் மாற்றம் காணும்
உயர்வான இயற்கைச் சூழல்
வளம் கொழிக்கும் வண்ணம்
வரமாக இறங்கி அற்புதம் காணும்
10. காணவே கலியுக மக்கள்
கட்டாயம் அரங்கன் வாழ்
ஞானக் குடிலை நாடியே
நல்லதொரு சரணாகதி தன்னை
11. தன்னையே கண்டுவிட வாழ்வில்
தவராஜன் தவதரும பலம்
அண்ணலின் கரம்பட தீட்சையாக
ஆற்றலாக இறங்கி மாற்றம் தரும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—